# மூதாட்டிக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது

**மதுரை, ஜன. 28:** மோசடியாக நிலம் வாங்கிய வழக்கில், உசிலம்பட்டி நீதிமன்றத்துக்கு சாட்சியம் அளிக்க வந்த மூதாட்டிக்கு கொலை மிரட்டல் விடுத்தவரை போலீஸார் கைது செய்தனர்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே உள்ள கட்டத்தேவன்பட்டியைச் சேர்ந்த ராமசாமி மனைவி கச்சம்மாள்(70). இவர், பாகப் பிரிவினை நிலத்தை மோசடியாக வாங்கியதாக அதே பகுதியைச் சேர்ந்த பேச்சியம்மாள் உள்பட 9 பேர் மீது வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கு விசாரணை உசிலம்பட்டி சார்பு-நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், இந்த வழக்கில் கச்சம்மாள் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்துக்கு திங்கள்கிழமை வந்தார்.

அப்போது, குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான உசிலம்பட்டி அருகே உள்ள வி.காளப்பட்டியைச் சேர்ந்த நடராஜன் மகன் பரத்லா(36) வழக்குத் தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கக் கூடாது எனவும், சாட்சியம் அளித்தால் கொலை செய்துவிடுவதாகவும் கச்சம்மாளை மிரட்டினாராம்.

இதுகுறித்து உசிலம்பட்டி நகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, பரத்லாவை செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

# பல்கலை. பேராசிரியைகள் உண்ணாவிரதம்

**மதுரை, ஜன. 28:** ஊதியம் வழங்கக் கோரி, மதுரை காமராஜர் பல்கலைக்கழக வளாகத்தில் பெண்ணியக் கல்வி மைய பேராசிரியைகள் செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு பெண்ணியக் கல்வி மையத்தின் இயக்குநர் ஆர். ராதிகாதேவி தலைமை வகித்தார்.

இதில் பல்கலைக்கழக மானியக் குழு 11-ஆவது நிதித் திட்டத்தின் கீழ், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கடந்த 2013-ஆம் ஆண்டு பெண்ணிய கல்வி மையம் உருவாக்கப்பட்டது. மையத்தில் பேராசிரியைகள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் என 5 பேர் பணியாற்றுகின்றனர்.

இவர்களுக்கு கடந்த 2024-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் முதல் 6 மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. பல்கலைக்கழக மானியக் குழு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட ஊதியத்தை விரைந்து வழங்க வேண்டும். இனி வரும் காலங்களில் காலதாமதமின்றி ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர். போராட்டத்தில் பேராசிரியைகள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை காமராஜர் பல்கலைக்கழக வளாகத்தில் செவ்வாய்க்கிழமை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட பெண்ணிய கல்வி மைய பேராசிரியைகள், பணியாளர்கள்.

# பழமுதிர்ச்சோலையில் தைப்பூசம் பிப்.2-இல் தொடக்கம்

**மேலூர், ஜன. 28:** அழகர்கோவில் மலை மேலே அமைந்துள்ள பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலில் தைப்பூசத் திருவிழா வருகிற பிப்ரவரி 2-ஆம் தேதி காலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

விழாவையொட்டி, அன்று காலை 11 மணிக்கு மேல் மேளதாளங்கள் முழங்க யாகசாலை பூஜைகள் தொடங்குகின்றன. மாலையில் சுவாமி பூத வாகனத்தில் எழுந்தருளுகிறார்.

தொடர்ந்து, 3-ஆம் தேதி மாலை சுவாமி அன்ன வாகனத்திலும், 4-ஆம் தேதி காமதேனு வாகனத்திலும், 5-ஆம் தேதி ஆட்டுக் கிடாய் வாகனத்திலும், 6-ஆம் தேதி பூச் சப்பரத்திலும், 7-ஆம் தேதி யானை வாகனத்திலும், 8-ஆம் தேதி பல்லக்கிலும், 9-ஆம் தேதி குதிரை வாகனத்திலும் கோயில் பிரகாரத்தில் எழுந்தருளுகிறார்.

பிப். 10-ஆம் தேதி காலை சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளும், தீபாராதனையும் நடைபெறும். தைப்பூசத்தையொட்டி, பிப்.11-ஆம் தேதி அதிகாலை 4.30 மணியளவில் கோயில் நடை திறக்கப்பட்டு, யாக சாலை பூஜைகளும், காலை 11 மணியளவில் சுவாமி சிம்மாசன வாகனத்திலும் எழுந்தருளுகிறார். பிற்பகலில் வெள்ளி மயில் வாகனத்தில் சுவாமி வலம் வருகிறார். மாலையில் நடைபெறும் தீர்த்தவாரியைத் தொடர்ந்து, கொடியிறக்கத்துடன் தைப்பூசத் திருவிழா நிறைவடைகிறது.

விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் துணை ஆணையர் செல்லத்துரையும், அறங்காவலர்கள் குழுவினரும் செய்து வருகின்றனர்.

# பெண்களிடம் பண மோசடி செய்தவர் கைது

**மதுரை, ஜன. 28:** மதுரையில் கடையை வாடகைக்கு தருவதாகக் கூறி, 2 பெண்களிடம் ரூ. 6 லட்சம் மோசடி செய்தவரை போலீஸார் கைது செய்தனர்.

மதுரை கோச்சடை பகுதியைச் சேர்ந்தவர் சரவண முருகன். இவர் தனது மனைவி மாரியம்மாளுடன் சேர்ந்து கோச்சடை பகுதியில் பழச்சாறு விற்பனைக் கடை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில், விளாங்குடி பகுதியில் மாரியம்மாள் தனியாகக் கடை நடத்துவதற்காக ஆலவாய்நகரைச் சேர்ந்த பகத்சிங்கை அணுகினார். அப்போது, கடைக்கு வாடகையாக ரூ.12 ஆயிரமும் முன்பணமாக ரூ.3 லட்சமும் கேட்டார்.

மாரியம்மாள் ரூ. 3 லட்சத்தை பகத்சிங்கிடம் கொடுத்து, அதற்கு ஒப்பந்தமும் செய்து கொண்டார். ஆனால், பல நாள்கள் ஆகியும் பகத்சிங் அவரது கடையைக் கொடுக்கவில்லை.

இதுதொடர்பாக மாரியம்மாள் விசாரித்தபோது, விளாங்குடியைச் சேர்ந்த வசந்தி என்பவருக்கும் கடையை வாடகைக்கு விடுவதாகக் கூறி, அவரிடமும் ரூ.3 லட்சம் வாங்கியிருந்தது தெரியவந்தது.

இதற்கிடையில், மாரியம்மாளும், வசந்தியும் அந்தக் கடைக்குச் சென்று பார்த்த போது, அங்கு வேறொருவர் பிரியாணிக் கடையை புதிதாகத் திறந்தது தெரியவந்தது.

இதுகுறித்துக் கேட்ட இரு பெண்களையும் பகத்சிங் தரக்குறைவாகப் பேசி கொலை மிரட்டல் விடுத்தாராம்.

இதுகுறித்து கூடல்புதூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, பகத்சிங்கை செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

# சின்னக்கட்டளையில் நாளை மின் தடை

**மதுரை, ஜன. 28:** சின்னக்கட்டளை, அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு வியாழக்கிழமை (ஜன.30) மின் தடை அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்து உசிலம்பட்டி மின் பகிர்மானக் கோட்ட செயற்பொறியாளர் கோ. வெங்கடேஸ்வரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சின்னக்கட்டளை துணை மின் நிலையத்தில் வியாழக்கிழமை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதையொட்டி, சின்னக்கட்டளை, சேடப்பட்டி, குப்பல்நத்தம், மங்கல்ரேவு, எஸ்.கோட்டைப்பட்டி, கணவாய்பட்டி, கன்னியம்பட்டி, பெருங்காமநல்லூர், செம்பரணி, சென்னம்பட்டி, பரமன்பட்டி, பெரியகட்டளை, செட்டியப்பட்டி, ஆவலச்சேரி, கே.ஆண்டிபட்டி, வீராளம்பட்டி, தொட்டணம்பட்டி, சலுப்பப்பட்டி, குடிசேரி, ஜம்பலபுரம், கேத்துவார்பட்டி, பேரையூர், சாப்டூர், அத்திப்பட்டி, அணைக்கரைப்பட்டி, மெய்நத்தம்பட்டி ஆகிய பகுதிகளில் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்றார்.

# டங்ஸ்டன் ஏலம் ரத்து: பிரதமர்தான் காரணம்



**திருப்பரங்குன்றம், ஜன. 28:** டங்ஸ்டன் சுரங்கத் திட்ட ஏலம் ரத்தானதற்கு பிரதமர் நரேந்திர மோடியும், பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலையும்தான் காரணம் என இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் செவ்வாய்க்கிழமை பாலாபிஷேகம் செய்து சுவாமி தரிசனம் செய்த அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தைப்பூச விழாவுக்கு அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டது போல மாசி மகா சிவராத்திரிக்கும் அரசு விடுமுறை அறிவிக்க வேண்டும். கோயில்களில் பக்தர்களுக்குத் தேவையான வசதியை மேம்படுத்த வேண்டும்.

மதுரை மாவட்டம், அரிட்டாபட்டி டங்ஸ்டன் சுரங்கத் திட்ட பிரச்னையில் இந்தப் பகுதி விவசாயிகளை தில்லிக்கு அழைத்துச் சென்று சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் அழுத்தம் கொடுத்தது பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலைதான். எனவே, இந்த பிரச்னை சுமுகமாக முடிவுக்கு வந்ததற்கு பிரதமர் மோடியும், அண்ணாமலையும்தான் காரணம். திமுக ஆட்சியில் பயங்கரவாதம், தீவிரவாதம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. தமிழக போலீஸாரும் நடவடிக்கை எடுப்பதில்லை.

திருப்பரங்குன்றம் மலை மேலே உள்ள தீபத் தூணில் கார்த்திகை மகா தீபம் ஏற்றுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கி உள்ளது. ஆனால், இந்து சமய அறநிலையத் துறை அங்கு தீபம் ஏற்றாமல், மோட்ச தீபம் ஏற்றக் கூடிய இடத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுகின்றனர் என்றார் அவர்.

முன்னதாக, திருப்பரங்குன்றத்துக்கு வந்த இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத்துக்கு அகில பாரத அனுமன் சேனா மாநில அமைப்பு பொதுச் செயலர் ராமலிங்கம் தலைமையில் அந்தக் கட்சியினர் வரவேற்பு அளித்தனர்.

# மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்

**மதுரை, ஜன. 28:** மதுரை பாத்திமா மகளிர் கல்லூரி, புதுதில்லி அறிவியல், தொழில்நுட்பத் துறை சார்பில் 'மலேரியா எதிர்ப்பு மருந்து கண்டுபிடிப்பில் சமீபத்திய முன்னேற்றங்கள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

நிகழ்வுக்கு கல்லூரி முதல்வர் செலின் சகாய மேரி தலைமை வகித்தார். இதில் தில்லி பல்கலைக்கழகத்தின் வேதியியல் துறை பேராசிரியர் சதீஷ்குமார் அவஸ்தி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, மலேரியா எதிர்ப்பு மருந்து கண்டுபிடிப்பில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்துப் பேசினார்.

கருத்தரங்கில் ஆய்வுப் புலத் தலைவர் கலா உள்ளிட்ட பேராசிரியைகள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, உதவிப் பேராசிரியை பிரியதர்ஷினி வரவேற்றார். இணைப் பேராசிரியை தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.


**PUBLIC NOTICE**

I, No. 15375840M, Rank Ex-NK(TS) Name SARAVANAN G son of K.Gurusamy, residing at No.184, Veeralakshmi Nagar Village / Town-Kodangipatti, Post- Kodangipatti, Pin Code - 625531, Tehsil / Taluk-Bodinayakanur, District - Theni, State-Tamil Nadu have changed my wife name from **LOURDUMARY PUSHPA to LOURDUMARY M** Before NOTARY PUBLIC.

**(Ex- NK(TS) SARAVANAN G)**
**No: 15375840M**

**Oushadhi**
**The Pharmaceutical Corporation (I.M.) Kerala Ltd.**
(A Govt. of Kerala Undertaking)
Kuttanellur, Thrissur-14, Kerala
Ph: 0487-2459841, 2459842, 2459807.
E-mail : purchase@oushadhi.org
P/121/2024-25 Date: 29.1.2025

**TENDER NOTICE**

Tenders are invited for the supply of **I) Raw Materials and II) Containers & Packing Materials** for the period **1st April 2025 to 30th September 2025**. Tenders can be downloaded from the website **www.oushadhitender.com**. For more details, please visit our website **www.oushadhi.org** or contact our Purchase Division at Kuttanellur.
Thrissur (Sd/-) Managing Director

**கூடங்குளம் ISTS ட்ரான்ஸ்மிஷன் லிமிடெட்**
(பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்டின் 100% முழு உரிமையுள்ள துணை நிறுவனம்)
B-9, குதாப் நிறுவனப் பகுதி, கத்வாரியா சராய், புது தில்லி -110 016

**அறிவிப்பு**
(மின்சாரச் சட்டம், 2003 இன் பிரிவு 15 இன் துணைப் பிரிவு (2) இன் கீழ்)

1. கூடங்குளம் ISTS ட்ரான்ஸ்மிஷன் லிமிடெட், B-9, குதாப் இன்ஸ்டிடியூஷனல் ஏரியா, கத்வாரியா சராய், புது தில்லி 110016 இல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் ... [illegible]

| வ. எண் | லைன் / துணை மின்நிலையத்தின் பெயர் | BPC/திறன் | பரிமாற்றக் கட்டணங்கள் (INR) | அட்டவணை COD | கருத்துகள் |
|---|---|---|---|---|---|
| 1. | KNPP 3&4 - தூத்துக்குடி-II GIS PS 400 KV (குவாட்) D/C லைன் | 120 கி.மீ | 690.03 | 31.12.2026 | - |
| 2 | தூத்துக்குடி-II GIS PS 400 KV GIS லைன் பே... 2 எண்கள். | - | | | |

குறிப்பு: (i) வ. எண் 1 & 2- க்கான அமைவிடங்கள் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ளன (ii) முழுமையான விவரத்திற்கு தயவுசெய்து பார்வையிடவும் https://www.powergrid.in/subsidiaries

2. முழுமையான விண்ணப்பம் மற்றும் ஆணையத்தின் முன் தாக்கல் செய்யப்பட்ட பிற ஆவணங்கள் பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்டின் வலைத்தளமான https://www.powergrid.in/subsidiaries-இல் ... [illegible]

3. ஆட்சேபனைகள் அல்லது பரிந்துரைகள் ஏதேனும் இருந்தால், செய்தித்தாளில் அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள் ... புது தில்லி - 110029 என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

இடம்: புது டெல்லி
தேதி: 29.01.2025
V. முருகன், திட்டப் பொறுப்பாளர், கூடங்குளம் ISTS ட்ரான்ஸ்மிஷன் லிமிடெட்
PGCCNotice-19/(TBCB)/Advt-34/024-25/Shabda

**வேலை வாய்ப்புகள்**

**General**

**SBI**
பாரத ஸ்டேட் வங்கி
மத்திய பணியமர்த்தம் மற்றும் பதவி உயர்வுத் துறை
கார்ப்பரேட் மையம், மும்பை
தொலைபேசி: 022-22820427

**ஒப்பந்த அடிப்படையில் துறை வல்லுநர் பணிநிலைப் பிரிவு அதிகாரிகளின் பணியமர்த்தம்**

ஒப்பந்த அடிப்படையில், கீழ்க்கண்ட பதவிக்காக இந்திய குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

| விளம்பர எண் : CRPD/SCO/2024-25/28 | | |
|---|---|---|
| பதவியின் பெயர் | காலியிடம் | சமமான நிலை |
| துணைத் தலைவர் (முதலீட்டாளர் தொடர்பு) | 01 | எஸ்எம்ஜிஎஸ்-V |

ஆன்லைனில் விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான மற்றும் ஆன்லைனில் விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதற்கான இணைப்புடன் தகுதி வரம்பு (வயது, அனுபவம், முந்தைய பணி விவரங்கள் ஆகியவை), காலியிடங்களின் விவரங்கள், தேவையான கட்டணம் மற்றும் பிற விவரங்கள் அறிய, வங்கியின் https://bank.sbi/web/careers வலைதளத்தைப் பார்க்கவும். விண்ணப்பிக்கும் முன்னரும், கட்டணம் செலுத்தும் முன்னரும் தங்கள் தகுதி மற்றும் பிற விவரங்களை உறுதி செய்து கொள்ள விரிவான விளம்பரத்தை பார்க்கவும். ஏதேனும் சந்தேகங்களுக்கு, (https://bank.sbi/web/careers/post-your-query) வங்கியின் வலைதளத்திலுள்ள "CONTACT US" —> "Post Your Query" என்ற இணைப்பின் மூலம் எங்களுக்கு எழுதவும்.

- **ஆன்லைனில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க மற்றும் கட்டணம் செலுத்தவேண்டிய தேதி: 22.01.2025-லிருந்து 13.02.2025 வரை.**

இடம்: மும்பை
தேதி : 22.01.2025
பொது மேலாளர் (ஆர்பி & பிஎம்)

**இணையவழி மோசடிக்குப் பலியாகிவிடாதீர்கள்!**
24x7 உதவி எண்
**அழையுங்கள் 1930**
புகார்களைப் பதிவு செய்ய
**www.cybercrime.gov.in**
Scan to register complaints
மக்கள் நலன் கருதி வெளியிடுவது
தமிழ்நாடு இணையவழி குற்றப் பிரிவு காவல்துறை | தினமணி

**SOUTH INDIAN Bank** EXPERIENCE NEXT-GEN BANKING
தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்: முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. Ro1015@sib.co.in, Ph: 0452 2300205

**இ- ஏல விற்பனை அறிவிப்பு**

Ref: RO/SAR/SN/135/2024-25 தேதி: 27.01.2025

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

| | |
|---|---|
| 1) திருமதி.S.காருண்யா தேவி, M/s. மணீஸ் பைரோ ஆயில் உரிமையாளர், எண். 4/46, சோழவந்தான் ரோடு, நகரி, மதுரை, தமிழ்நாடு-625221. மேலும் வசிப்பிடம்: 4/46, அய்யன்கோட்டை நகரி, மதுரை, தமிழ்நாடு-625221. 3) திரு. T.சந்தானகிருஷ்ணன், வசிப்பிடம்: 4/46, அய்யன்கோட்டை நகரி, மதுரை, தமிழ்நாடு-625221 | 2) திரு. T. பாஸ்கரன், வசிப்பிடம், எண். 63-A-4, வார்டு எண். 29, ரேஞ்சர் ஆபீஸ் ரோடு, கம்பம், தேனி, தமிழ்நாடு-625516. மேலும் வசிப்பிடம்: எண். 63-AB, வார்டு எண். 29, ரேஞ்சர் ஆபீஸ் ரோடு, கம்பம், தேனி, தமிழ்நாடு-625516. மேலும் வசிப்பிடம்: 4/46, அய்யன்கோட்டை நகரி, மதுரை, தமிழ்நாடு-625221. |

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 26.01.2025 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை மேற்கு கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.1,53,01,404.99 (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து மூன்று லட்சத்து ஆயிரத்து நானூற்றி நான்கு மற்றும் பைசா தொண்ணூற்றி ஒன்பது மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே" என்ற அடிப்படையில், "என்ன உள்ளதோ அப்படியே", மற்றும் "அது எவ்வாறு இருப்பினும்" என்ற நிலையில் 26.02.2025 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர்/உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

| சொத்தின் உரிமையாளர் பெயர்: திரு. T.பாஸ்கரன் | |
|---|---|
| **சொத்து விபரம்:-** தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, உத்தமபுரம் கிராமத்திற்குட்பட்ட சர்வே எண். 690/7, ரேஞ்சர் ஆபீஸ் ரோடு, பழைய வார்டு எண். 14, புதிய வார்டு எண்.29, பழைய கதவு எண். 199A, புதிய கதவு எண். 63A-4, (வரிவிதிப்பு எண்.122/029/00342), கம்பம் நகராட்சியில் அமைந்துள்ள கட்டடத்துடன் கூடிய 6606.25 சதுரடி அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு.T.பாஸ்கரனுக்கு சொந்தமான இந்த சொத்து, கம்பம் சார்பதிவகத்தில் 02.01.2002 தேதியிட்ட பாகப்பத்திர எண்.01/2002-ல் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: நகராட்சி ரோடு, தெற்கே: அட்டவணை "A"-லுள்ள வீடு & N K திருமலை வெள்ளைச்சாமிபிள்ளை மற்றும் பிறருடைய வீடு, கிழக்கே: அட்டவணை "A" -லுள்ள வீடு & நகராட்சி ரோடு, மேற்கே: T.கோபாலகிருஷ்ணன் விற்ற மனை. | |
| நிர்ணயிக்கப்பட்ட தொகை | ரூ.1,71,17,000/- (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தொரு லட்சத்து பதினேழாயிரம் மட்டும்). |
| முன் வைப்புத் தொகை (EMD) | ரூ.17,11,700/- (ரூபாய் பதினேழு லட்சத்து பதினோராயிரத்து எழுநூறு மட்டும்). |
| ஏல அதிகரிப்புத் தொகை | ரூ.50,000/- |
| இ-ஏல நேரம் மற்றும் தேதி | 26.02.2025, 02:00 PM முதல் 03:00 PM வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற தன்நீட்சியுடன்) |
| வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள் | 01.12.2022 முதல் 31.01.2024 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. |

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்.(Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.
சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ (Ph. No. 0452-2300205/9894647220) அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட். மதுரை மேற்கு கிளையின் மொபைல் எண் 9400015179 -ல் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்

**equitas** எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002

**சுவாதீன அறிவிப்பு**
**2002 கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள், விதி 8 (1)**
**(அசையா சொத்துக்களுக்காக)**

கம்பெனிகளின் சட்டம் 1956-ன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமான M/s.எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் மற்றும் கம்பெனிகளின் சட்டம் 2013 பிரிவு 2 (20) ... [illegible]

தேதி: 27.01.2025 அதிகாரப்பூர்வ அதிகாரி
இடம்: திண்டுக்கல் மாவட்டம் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்


**அடையாள சுவாதீன அறிவிப்பு**

**ICICI Bank** கிளை அலுவலகம்: ICICI வங்கி லிட்., 4/10, மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஓசூர் முதன்மைச் சாலை, பெங்களூரு - 560068.

இடப்படும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்கீழ், ... [illegible] (DEMAND NOTICE) ... [illegible]

| வ. எண் | கடன்தாரர் பெயர் / கடன் கணக்கு எண் | சொத்து விபரம் & அடையாள சுவாதீன தேதி | கோரிக்கை அறிவிப்புத் தேதி & கோரிக்கை அறிவிப்பின் படி தொகை (ரூ.) | கிளையின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ கணேஷ் மொபைல்ஸ், M. கணேசன் & G. கார்த்திக் குமார்/ ... [illegible] | [illegible] | அக்டோபர் 09, 2024 ரூ. 51,70,930.41/- | விருதுநகர் |

தேதி : ஜனவரி 29, 2025 இடம்: விருதுநகர் ICICI பேங்க் லிமிடெட்


உடனடிச் செய்திகள்
சூடாக சுருக்கமாக...
www.dinamani.com